IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# நா. முத்துக்குமார் கவிதைகளில் அறியப்படாத குரல்கள்

த. மீனாட்சி, சௌ. வீரலெக்ஷ்மி
ஆய்வு மாணவர், இணைப்பேராசிரியர்
மொழிபெயர்ப்புத் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம்**

கவிஞர் நா. முத்துக்குமார் கவிதைகளை முதன்மை ஆதாராமாகக் கொண்ட இவ்வாய்வுக் கட்டுரை பெண்களின் உணர்வுகளையும் அவர்களின் அறியப்படாதக் குரல்கள் பற்றியும் வரைகிறது. பெரும்பாலும் இவரது கவிதைகள் தன் சொந்த அனுபவத்தின் வெளிப்பாடாகவே இருக்கும் குறிப்பாக ‘பட்டாம்பூச்சி விற்பவன்’ எனும் கவிதைத் தொகுப்பில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு கவிதைகளில் உள்ள பெண்ணியக் கருத்துகள் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன. பெண்கள் சமையலறையிலும் தான் வேலை பார்க்கும் இடத்திலும் எதிர்கொள்ளும் இன்னல்களை இக்கட்டுரை விவரிக்கிறது.

**திறவுச் சொற்கள்**: நா. முத்துக்குமார், கவிதைகள், பெண் விடுதலை, ஆணாதிக்கம்.

**முன்னுரை**

தமிழின் இனிமையை மற்ற இலக்கிய வகைகளைக் காட்டிலும் கவிதையில் தான் அதிகம் உணர முடியும். தமிழ் இலக்கியம் தோன்றியதும் கவிதை வடிவில் தான். அன்று முதல் இன்று வரை கவிஞர்கள் தங்களுக்கேற்ற நடையில் தங்கள் கருத்துகளை முன்வைக்கின்றனர். அந்த வகையில் பெண்ணியக் கருத்துகளை கவிதை வடிவில் எளிய நடையில் கொணர்கிறார் கவிஞர் நா. முத்துக்குமார். இவரின் கவிதையில் அமைந்திருக்கும் பெண்ணியம் சார் கருத்துகளையும் அவர்களால் எளிதில் வெளிப்படையாகக் கூற முடியாத விடயங்களையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**கவிஞர் நா. முத்துக்குமார்**

தமிழ்த் திரையுலகில் சிறந்த பாடலாசிரியராக அறியப்பட்ட நா. முத்துக்குமார் சிறந்த கவிதைத் தொகுப்புகளுக்கும் சொந்தக்காரர் ஆவார். எழுத்தாளர் சுஜாதாவால் வெளியுலகிற்கு அறியப்பட்டவர் தனது முதல் கவிதைத் தொகுப்பை 1997 ஆம் ஆண்டு வெளியிட்டார். அதில் இயக்குனர் பாரதிராஜா அவர்கள் தனது சிறிய அறிமுகவுரையில் “எங்கள் ஊர்ப் பக்கங்களில் ஓலைச்சுவடியில் நூலை நுழைத்து சோதிடம் பார்ப்பார்கள். சிலருக்குக் நல்லது வரும், சிலருக்குக் கெட்டது வரும். இந்தப் புத்தகத்தில் கண்ணை மூடிக்கொண்டு எந்தப் பக்கத்தைப் பிரித்தாலும் நல்ல கவிதைகள் வரும்” (ப.9) என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆய்வுக் கட்டுரையில் நா. முத்துக்குமாரின் ‘பட்டாம்பூச்சி விற்பவன்’ கவிதைத் தொகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு கவிதைகளில் உள்ள நாம் அன்றாடம் பார்க்கக்கூடிய பழகக்கூடிய பெண்கள் வெளியில் கூறாத, அறியப்படாத அவர்களின் குரல்கள் வெளிப்படுகின்றன.

**தையலோடு தையலாக**

‘தையல்’ என்று தலைப்பிட்ட இக்கவிதை தையல் வேலைப்பார்க்கும் எளிமையான பெண்களின் அன்றாட வாழ்வில் அவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள் பற்றிய கவிதை ஆகும். ஆணாதிக்கச் சமூகத்தை எதிர்த்துப் பெண்கள் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே போராடத் துவங்கிவிட்டனர். அதில் அவர்கள் முன்வைத்த சில கோரிக்கைகளில் வெற்றியும் கண்டனர். ஒருவழியாக பெண்களுக்கான விடுதலையை அடைந்துவிட்டோம், இனி பெண்கள் சுதந்திரமாக இருக்கலாம், ஆண்கள் இனி அவர்களை அடக்க மாட்டார்கள் என்று சில பெண்ணியவாதிகள் நினைத்தால் இக்கவிதையை வாசித்த பிறகு இந்த விடயங்களை ஏற்க மறுப்பார்கள்.

தையல் இயந்திரத்தில் நாள் முழுக்க அமர்ந்து துணிகளைத் தைக்கும் பெண்கள் தாங்கள் படும் துயரங்களையும் வெளியே கசியாமல் தைத்து விடுகிறார்கள். நீண்ட நேரம் தைப்பதால் ஏற்படும் அந்தரங்க வலிகளைத் தாங்கி நிற்கும் பெண்கள் தங்களுக்கு நேரும் இன்னல்களையும் வெளிப்படையாகக் காட்டாமல் தாங்கி நிற்கிறார்கள். அவ்வாறான இன்னல்களில் ஒன்று சக ஆண் தன்னைத் தவறான எண்ணத்துடன் நோக்குவது. ஆண்களால் சூழ்ந்த இந்த ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்களுக்கு எதிரான இத்தகு இன்னல்களை அவர்கள் வெளியில் கூற முடியாமல் தன் கோபத்தை தையல் மீது மட்டுமே காட்ட முடிகிறது. இந்தச் சூழலை கீழ்வரும் வரிகளில் கவிஞர்,

“சகஆணின்
சபலப்பார்வையால்
வேகமாய்சுற்றிய
விரல்களின் கோபம்” (ப.22)

.என்று வார்த்தைகளாலோ செயல்களாலோ வெளிப்படுத்த இயலாத கோபத்தை விரல்களில் வெளிப்படுத்துவதாகக் கூறுகிறார். பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை, தொடுதலால் மட்டுமே நிகழும் என்ற கருத்தை முறியடித்துப் பார்வையாலும் பாலியல் வன்கொடுமை நிகழ்கிறது என்பதை வெளிப்படுத்துவதோடு அதை எதிர்க்க இயலாமல் துயரடையும் பெண்ணின் நிலையையும் இக்கவிதை உணர்த்துகிறது.

**பெண் விடுதலை**

பெண்கள் தங்கள் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் துயரங்கள் எண்ணிலடங்காதவை. அவற்றுள் ஒன்று, அவர்கள் சமையலறையில் படும் பாடு. ‘அம்மாவின் கரிச்சுவர்’ எனும் கவிதையில் கவிஞர் நா. முத்துக்குமார் தனது அம்மாவின் துயரத்தை விளக்கியுள்ளார். விறகடுப்பில் சமைப்பதால் கருத்திருக்கும் சமையலறைச் சுவர்களில் ஆரம்பிக்கும் இக்கவிதை பெண்விடுதலையை மையமாகக் கொண்டதாகும்.

எத்தனை முறை வெள்ளையடித்தாலும் மீண்டும் மீண்டும் கருத்துப்போகும் சுவருக்கும் அம்மாவுக்கும் அந்யோன்யம் அதிகம்' என்கிறார். எவரொருவருடன் நாம் அதிக நேரம் செலவிடுகிறோமோ அவர்களுடன் தான் அந்யோன்யம் கூடும். அவ்வகையில் பார்த்தால் அம்மா வெளியுலகைக் காட்டிலும் சமையல் அறை உலகில் அதிக நேரம் இருக்கிறார். இதில் மழைக்காலங்களில் விறகுகள் நனைந்து விட்டால் விறகடுப்பில் சமைப்பது மிகவும் கடினம். ஈர விறகுகளால் புகை அதிகரித்து அந்தப் புகை நெடியினூடே சமையலையும் செய்கிறார். அம்மாவின் துயரையும் ஈர விறகுகளால் அவர் படும் இன்னல்களையும் கவிஞர்,

"அம்மாவுக்காய் அழுகிற
ஈர விறகுகளின்
புகைச்சோகம் தாங்கி
மேலும் கறுக்கும் அது." (ப. 31)

என்கிறார். நன்கு கருப்படைந்த கரிச்சுவரில் பால் கணக்கும் சீட்டுக் கணக்கும் எழுதும் அம்மா சமையல் பொறுப்பு மட்டுமல்லாது வீட்டின் பொருளாதாரப் பொறுப்பையும் சுமக்கிறார். திருமணத்திற்குப் பிறகு கேஸ் குக்கரிலும் டிஸ்டெம்பர் வண்ணமடித்த சமையலறையிலும் சமைக்கப் போகும் அக்காவிற்கு இந்த விறகடுப்பிலிருந்து கூடிய சீக்கிரம் விடுதலை கிடைக்கப்போகிறது என்று கூறும் கவிஞர்,

"சுவர் விடுதலை மட்டும்
பெண்விடுதலை என்றால்
அம்மாக்களை விட
அக்காக்கள் அதனை
அடைந்து விட்டார்கள்." (ப. 32)

என்று மண்சார்ந்த பெண்விடுதலை பற்றி எளிமையான வரிகள் மூலம் ஆழ்ந்த கருத்துகளைப் பதிவிட்டுள்ளார். விறகடுப்பில் சமைத்தால் என்ன கேஸ் அடுப்பில் சமைத்தால் என்ன வீட்டு வேலைகளும் சமையல் வேலைகளும் பெண்ணுக்கு மட்டுமே உரித்தானது அல்ல அவை ஆணும் பெண்ணும் சேர்ந்து பகிர்ந்து பார்க்க வேண்டிய வேலை எனும் கருத்து எல்லோர் மனதிலும் பதிந்து அதைத் தம் பிள்ளைகளுக்கும் சொல்லி வளர்த்தால் மட்டுமே பெண்விடுதலை முழுமையடையும்.

**முடிவுரை**

பெண்களின் உணர்வுகளையும் அன்றாட வாழ்வில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் தன் கவிதைகளில் எளிய நடையில் முன்வைத்துள்ளார் கவிஞர் நா. முத்துக்குமார். பெரும்பாலும் இவரது கவிதைகள் தன் சொந்த அனுபவத்தின் வெளிப்பாடாகவே இருக்கும். அன்றாட வாழ்வில் நாம் கவனிக்கத் தவறிய பெண்களின் அறியப்படாத குரல்கள் இனி கவனிக்கப்படட்டும். மண்சார்ந்த பெண்நிலை, பெண் விடுதலைக்கான குரலாக நா.முத்துக்குமாரின் குரல் ஒலிக்கிறது.

**அடிக்குறிப்பு**:

ப.9 - நா. முத்துக்குமார் கவிதைகள், பக்கம் 9
ப.22 - நா. முத்துக்குமார் கவிதைகள், பக்கம் 22
ப.31 - நா. முத்துக்குமார் கவிதைகள், பக்கம் 31
ப.32 - நா. முத்துக்குமார் கவிதைகள், பக்கம் 32

**முதன்மை நூல்**:

- முத்துக்குமார், நா. *நா. முத்துக்குமார் கவிதைகள்*. டிஸ்கவரி புக் பேலஸ், சென்னை, 2020.

**துணை நூல்**:

- முனைவர் பிரேமா, இரா. *பெண்ணியம்*. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, அக்டோபர் 1994.